JARJ Jamal Academic Research Journal-an Interdisciplinary ISSN(P): 0973-0303
S. Asic Hameed, JARJ-Vol-3-1-May-2022:150-157 ISSN(O): 2582-5941

தமிழ் நாடக இலக்கியத்திற்கு முஸ்லிம்களின் பங்களிப்பு

Contribution of Muslims to Tamil Drama Literature

Dr. S. Asic Hameed
Assistant Professor, Department of Tamil, Urumu Dhanalakshmi College, Tiruchirapalli - 620 019.

Abstract

Muslims have played a major role in the development of drama and contributed to the development of Tamil drama. In 1007 AD, 398 AH, a literary play was composed by Muhammad Ihmadul Hamadani and contributed to the development of Muslim drama. They have developed their artistic talent by composing plays in other states in India. They have created Tamil drama genres like Keerthanai, Palla, Kuram, Kuravanchi, Sindhu, Gummi and story songs with a theatrical tone. The historical message that Muslims have also contributed to the spread of dramas can be learned through electronic media. The purpose of this article is to highlight the historical record that Muslims have made a significant contribution to the art of drama literature.

Keywords: submission, peace, fulfillment, mahamat, palla, kuravanchi, sindhu, gummi, storytelling, ithayak kumaral, sabapathi, darka, hundred masala, folk song, mythology, lalkaur, sarare ish, lal gauhar, sherin, parahat.

முன்னுரை

இஸ்லாம் எங்கள் நெறி இன்பத்தமிழ் எங்கள் மொழி என்ற தாரக மந்திரத்தை உயிர்மூச்சாகக் கொண்டு இலங்கி வருபவர்கள் முஸ்லீம்கள். அத்தகைய உயிர்மூச்சுக் கொண்டு தமிழ் நாடக இலக்கிய வளர்ச்சிக்கு அவர்கள் பெரிதும் துணை நின்றுள்ளார்கள் என்பதை விளக்கும் விதமாக இக்கட்டுரை அமைகிறது.

இஸ்லாம்

இஸ்லாம் என்பது ஒரு நெறி அதற்கு அடிபணிதல், சாந்தி, அமைதி, ஈடேற்றம் பெறச் செய்வது போன்ற பொருள்கள் உண்டு. முஸ்லீம் என்பது மேற்கூறப்பட்ட இஸ்லாமிய நெறியில் அமைந்த ஒழுகலாறுகளை இறைவனுக்கு முழுமையாக அடிபணிந்து ஒழுகி அதன் காரணமாகச் சாந்தி நிலவப் பெற்று மறுமைகளில் ஈடேற்றம் பெறுபவர் என்பது பொருளாகும். இவ்வாறான இயல்பினை உடைய முஸ்லிம்களுக்கு வழிகாட்டும் நெறியாக இஸ்லாம் விளங்குகின்றது.

அரபு உலகம் செய்த பணிகள்

அரபி மொழியில் "மகாமாத்" இலக்கியம் என்ற நாடகச் சாயலுடன் படைக்கப்பட்டுள்ளது. இந்த நாடகத்தை முதன்முதலில் இஹ்மதுல் ஹமதானி என்பவர் ஹிஜ்ரி 398 இல் (கி.பி.1007இல்) என்பவரால் இயற்றப்பட்டது. அரபுச் சமூகத்தில் பல நாட்டைச் சேர்ந்த முஸ்லிம்கள் நாடக வளர்ச்சிக்குப் பெரிதும் துணை நின்றுள்ளனர்.

எகிப்து நாட்டில் அரங்க நாடகத்தை 1869இல் இஸ்மாயில் என்பவர் தோற்றுவித்துள்ளார். அதே நாட்டைச் சேர்ந்த யாகூப் சானு என்பவர் நகைச்சுவை, துன்பவியல் மற்றும் இசைநாடகமென்று 32 படைப்புக்களை வழங்கியுள்ளார். அடுத்தப்படியாக தௌஃபீக் அல்ஹகீம் என்பவர் 45 நாடகங்களை இயற்றியுள்ளார். 19ஆம் நூற்றாண்டில் துருக்கி நாட்டைச் சேர்ந்த நாமிக்கெமால் என்பவரின் வத்தன்(நாடு) என்ற நாடகம் நடக்கும் போது மக்கள் செய்த ஆரவாரத்தைக் கண்டு அஞ்சி சுல்தான் அவரை நாடு கடத்தியதாகக் கூறப்படுகிறது. இவ்வாறாக அரபுச் சமூகம் பல்துறைகளிலும் சிறப்புற்றுத் திகழ்ந்த ஓர் அறிவுக் கருவூலமாகப் பரிணமித்துள்ளது.

இந்தியாவில் முஸ்லீம்களின் நாடக பங்களிப்பு

இந்தியாவிலும் முஸ்லீம்கள் நாடகங்கள் பலவற்றைப் படைத்தளித்துள்ளனர், இந்தியாவில் இந்திர சபா என்ற நாடகம் சிறப்பிற்குரிய வகையில் திகழ்ந்துள்ளது. இது இன்பியல் இசை நாடகம். உருது மொழியில் திகழ்ந்த இதனை 1853 இல் ஆகா ஹசன் அமானத் என்பவர் இயற்றியுள்ளார். அத்துடன் பார்ஸி நாடகக் கம்பெனிகளை மக்களின் பொழுதுபோக்கிற்காக அமைத்தவர்களுள் முகமத் மியான், தாலீப் இருவரும் குறிப்பிடத்தக்கவர்கள். உருது நாடக வளர்ச்சிக்கு ஆகா ஹாஷிர் (1880-1938), இம்ஷியாஜ் அலிதாஜ் (1899-1975), அபீத் ஹுசேன் (1896-1979) முகம்மது முஜிப்(1902) ஜஹுதா ஜெய்தி(1928) போன்றோர் குறிப்பிடத்தக்க அளவில் தங்கள் பங்களிப்பை ஆற்றியுள்ளனர். காஷ்மீரில் குலாம்நபி தில்சாஸ்(1916-1941), அலீ முகமது லோனி (1926) வங்காளத்தில் நசுருல் இஸ்லாம் இந்தி மொழியில் மிர்ஜா காலிச் பேக்(1853-1929) போன்றோர் சிறப்பிற்குரிய வகையில் நாடகத் துறைக்குப் பெரிதும் துணைநின்றுள்ளனர்.

அரேபியரான இப்ராஹிம் அல்காலி (1925-2020) என்பவர் டில்லி தேசிய நாடக மன்றத்தில் (1962-1977) பதினைந்து வருடங்கள் பணிபுரிந்துள்ளார். நாடகங்களின் மேடையேற்றத்திற்கு தான் ஒரே ஒரு சக்தியை நம்பியிருந்ததாகவும், அச்சக்தி தேசிய நாடகப்பள்ளியில் மூன்றாண்டு காலம் பயிற்சி பெற்றுத் திரும்பிய அல்காஷியின் மாணவர் என்று வெங்கட்சாமிநாதன் தன்நூலில் குறிப்பிடப் பெற்றுள்ளமையிலிருந்து அல்ஹாசியின் நாடகத் தொண்டினை உணர்ந்து கொள்ளலாம்.

மலையாளத்திலும் தமிழிலும் பங்களிப்பு

மலையாளத்தில் கே.டி.முகம்மது என்பார் இது பூமியானது நாடகத்தை 1955இல் இயற்றியுள்ளார். இவ்வாறு முஸ்லிம்கள் பலரும் நாடகத் துறைக்கு தங்கள் பங்களிப்பைப் பெரிதும் ஆற்றியுள்ளனர். அத்துடன் தமிழக முஸ்லிம்களும் சிறப்பிற்குரிய வகையில் நாடகத் துறைக்குப் பெரிதளவு துணை நின்றுள்ளனர். அவர்கள் தமிழ் நாடக இனங்களான கீர்த்தனை,பள்ளு, குறம், குறவஞ்சி, சிந்து, கும்மி, கதைப்பாடல்கள் ஆகியவற்றுள் பலவற்றை நாடகச் சாயலுடன் திகழுமாறு படைத்துள்ளார். புதுக்கவிதைகளில் நாடகத்தன்மை விளங்குமாறும் செய்துள்ளனர். ஆத்துடன் புதுவகை நாடகங்களையும் இதிகாச வேதாந்த இசுலாமிய நாடகங்களையும், சமுதாய, வரலாற்று நாடகங்களையும் படைத்துள்ளனர். அவ்வாறு படைத்தவர்களுள் சாதாவதானி ஷெய்குத்தம்பி பாவலர் எம்.ஏ.அப்பாஸ், டி.எம்.எம். அஹ்மது (சாரண பாஸ்கரன்), ரஷித்(ஆர்.பி.மல்லாரி), கா.மு.ஷெரிப், எம்.எஸ்.அக்பர்(தூயவன்) வி.எம்.ஷாஜஹான் கனி, எஸ்.கே.எஸ். சாகுல் ஹமீது(இன்குலாப்) போன்றோர் குறிப்பிடத்தக்கவர்.

வானொலி

நாடகங்கள் எழுதும் துறையிலும் நம்மவர் சிலர். கவனம் செலுத்தியுள்ளனர். ஆர்.பி.மல்லாரி, ஜமீலா, செந்தாமரை போன்ற பெரிய எழுத்தாளர்கள் வானொலியோடு தொடர்புள்ளவர்களாக இருப்பதால், இவர்கள் பற்றபல நாடகங்களையும் எழுதியாக வேண்டும் என்ற நிலையில் நிறைய எழுதியுள்ளனர். இடையிடை இஸ்லாமியப் பின்னணியிலானவற்றையும் இவர்கள் படைத்துள்ளனர். ஆர்.பி.மல்லாரியின் "பன்னீர் மணம்" – உமர் கையாம் வாழ்வைச் சித்தரிப்பது – நூலுருவில் வந்துள்ளது.

"மலாயா நண்பர்" வார இதழிலும், முஸ்லிம் தினசரியிலும் வானொலியிலுமாக எமது சரித்திர நாடகங்கள் சில வெளிவந்த துண்டு, கரீமா பேகம் என்ற புனை பெயரில் வந்தவை பல. சுல்தானிய ரஸியா, அக்பரின் அவையிலே குறிப்பிடத்தக்கவை. "தாஜ்மஹால்" என்ற பெயரில் வெளியான நெடு நாகம் ஷாஜஹான் மன்னருடையவும், சிற்பி ஒருவனுடையவும் குடும்ப வாழ்க்கையை குடும்ப வாழ்க்கையை விவரிக்கிறது. முன்கோபி என்ற எமது நாடகம் திருச்சி வானொலியிலிருந்தும் "தோட்டி மஹால்" என்ற நாடகம் இவ்வாண்டு ஆரம்பத்தில் சிங்கையில் இருந்தும் ஒலிப்பரப்பாகியுள்ளன.

ஜேயெம் பல நல்ல வானொலி நாடகங்களை எழுதியுள்ளார். இவை ரேடியோ மலாயாவில் ஒலிபரப்பாயின. "பிறை தெரிந்தது" "கண் திறந்தது", அழகின் சிரிப்பு போன்றன குறிப்பிடத்தக்கவை. வீரர் அழ முஹ்ஸி;ன் அடிமையின் தீர்ப்பு – பத்திரிக்கைகளில் வெளிவந்தவை.

கவிஞர் சாரண பாஸ்கரன் "பிர்தௌஸி" என்ற கவிதை நாடகத்தை வானொலி வாயிலாகத் தந்துள்ளார். பலமேடை நாடகங்களை எழுதியுள்ள யுவன்(எம்.ஏ.கபூர்) வானொலிக் கவிதை நாடகங்களையும் இயற்றியுள்ளார். ஏ.எம்.மீரான் வானொலி நாடகங்களை பல எழுதியுள்ளார். பெரும்பாலும் சென்னையிலிருந்து ஒலிபரப்பாகியுள்ளன. இதுபோல் எஸ்.கே.ஜி அப்துல்காதரும் பல நாடகங்களை இயற்றியுள்ளாhர். "மருதாணி" நூலுருவில் வந்தது.

ஈழத்தில் ஏராளமான முஸ்லிம் சமுதாய நாடகங்கள் ஒலிபரப்பப்பட்டு வருகின்றன. ஒன்றிரண்டு சிறப்புடனும் திகழ்கின்றன. ஏயாரெம் ஸலீம் பல வானொலி நாடகங்கள் வழங்கியுள்ளனர். மேடை நாடகங்களும் இவர் எழுதியுள்ளார்.

பொதுவான நாடகங்கள் பல எழுதிய எம்.ஏ. அப்பாஸ் துரோகி என்ற முஸ்லிம் சமூக நாடகம் ஒன்றையும் தந்துள்ளார். "ஹஸன்",தூத்துக்குடி முஸ்தபா ஹுசைன், ஆவூர் எம்.பி. முஹியித்தீன் முதலியோர் பத்திரிக்கைகளில் ஒரு சில எழுதியுள்ளனர்.

ஜெய்னுலாபுதீன் சாயபு

இவர் மதிமிகு மகராசன் சரித்திரம் முதலிய நாடக நூல்களும், வாழ்த்துப் பாடல்களும் எழுதியுள்ளார். இவர் காலம் 1872-1948. குலோபகாவலி, கீதா கல்யாணம், நல்ல தங்காள், வனமாலிகா முதலிய நாடக நூல்கள் இவர் இயற்றியிருக்கிறார். நாடகங்களில் நடித்தும் இருக்கிறார். இவர்தம் நாடக நூல்களுள் பெரும்பாலானவை இன்று கிடைக்கவில்லை. இவ்வாறு இசுலாம் வளர்த்த இசைத்தமிழ் என்ற நூலில் குறிப்பிடப் பெற்றுள்ளது. (ப.106)1

இளையான்குடிக்கு அருகிலுள்ள புதூரைச் சேர்ந்த முஸ்லிம்களுள் சிலர் நாடகத் துறைக்கு தங்கள் பங்களிப்பினை ஆற்றியுள்ள செய்தியினை 'இளையான்குடி வரலாறு" என்ற நூலின் வாயிலாக அறிந்து கொள்ளலாம்.

தபால் நிலைய அதிகாரியாக இருந்த ஜேப்பாவின் புதல்வரான எஸ்.அப்துல் ரஹ்மான் என்பார். நீதி, மாணவன் ஆகிய நாடகங்களை இயற்றியுள்ளார். அவரது "நிதிநாடகம்" அரங்கேற்றத்தின் போது கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் புதூருக்கு வருகை தந்து வாழ்த்துறை வழங்கியுள்ளதாகவும் குறிப்பிடப் பெற்றுள்ளது. அத்துடன் சாலையூரைச் சேர்ந்த சேக் பரீத், லாஸ்காஸ் சிராய் இஸ்மாயில், புலவர் பெரி, காசிம்,

புதூர் கருத்தலெவை என்ற அப்துல் ஆலிம், கே.ஏ.ஜியாவுதீன் (முன்னாள் கல்லூரி அலுவலர்) போன்றோர் எழுதியுள்ள நாடகப் படைப்புகள் நமக்கு கிடைக்கவில்லை என்ற செய்தியையும் தெரிவித்துள்ளது. (ப.217)

இந்நாடக நூலில் புதூரைச் சேர்ந்த கே.எம்.ஏ. அபுகனி என்பார் நாடகத்துறைக்குச் சிறப்பான வகையில் தன் பங்களிப்பினைச் செய்துள்ளார் என்பதனைப் பின்வரும் வகையில் கண்டு கொள்ளலாம். சமயப்பொறை, சகோதர உணர்வு, பெண்சம உரிமை, வரதட்சணை ஒழிப்பு, குடும்ப நலம், சுயமரியாதைக் கருத்துக்கள் ஆகியவற்றை மக்களிடையே பரப்புவதற்கு சக்தி வாய்ந்த சாதனமாக இவருக்கு நாடகங்கள் பயன்பட்டன. இவர் எழுதிய சபாபதி, ஏழையின் காதல், இருமணம், இதயக் குமறல் போன்ற நாடகங்களில் சீர்திருத்தக் கருத்துக்களை மக்களிடையே பரப்பி, தான் சிறந்த நாடக ஆசிரியர் என்பதனை நிரூபித்தார்.

தர்காக்களுக்குச் செல்வதும் இறைவனுக்கு இணை வைப்பதும், அல்லாஹ்விடம் வேண்டாமல் நேரடியாக அவ்லியாக்களிடம் பெண்கள் பிள்ளைவரம் கேட்டதும் போன்ற மார்க்கத்துக்குப் புறம்பான பழக்க வழக்கங்கள் இஸ்லாமிய சமுதாயத்தில் பரவி வந்தன.

இதனை எதிர்த்து அவர் புரட்சிகரமான தர்கா எதிர்ப்பு நாடகங்களை நடத்தினார். தர்கா எதிர்ப்பு நாடகங்களுக்கு புதூரில் அக்கால கட்டத்தில் பலத்த எதிர்ப்பு தோன்றியது. நாடகம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொழுதே மின்சாரம் துண்டிக்கப்பட்டது. இவர் எதிர்ப்புகளையெல்லாம் முறியடித்து நாடகங்களை நடத்தினார். இவருடைய நாடகங்களில் அவ்வூரைச் சார்ந்த பாடும் நடிகர்களாகப் பங்கேற்றனர். இவ்வாறு "இளையான்குடி வரலாறு" என்ற நூலில் குறிப்பிடப் பெற்றுள்ளது. (ப.153)2

பிறர் நாட்டு முஸ்லிம்கள் பங்களிப்பு

பிறர் நாட்டு முஸ்லிம்களும் தமிழில் நாடகங்களைப் படைத்துள்ளனர். இலங்கைச் சார்ந்த ஜீனைதா ஷெரீப்(கே.எம்.எம்.ஷெரீப்) இளங்கீரன் (சுபைர்) ஏ.ஏ.ஜீனைதீன், எம்.அஷ்ரப்கான், எஸ்.முத்துமீரான் சிங்கப்பூர் வாழ் ஜே.எம்.சாலி போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவார்கள்.

தமிழில் ரஷிய மொழி நாடகங்களை மொழி பெயர்த்தவர்களுள் நா.முகம்மது ஷெரீபு மற்றும் எம்.இஸ்மத் பாஷா ஆகியோர் சிறப்பிற்குரியோர் ஆவார். முஸ்லிம்களைப் பற்றி பிற சமயத்தாரும் தமிழில் நாடகங்களைப் படைத்துள்ளனர். மேற்குறிப்பிடப் பெற்ற அனைத்து வகையான நாடகங்களைப் பற்றியும் அறிந்து

கொள்வது நலம் பயக்கும் கருத்துக்களைப் பாமர மக்களையும் கவர்கின்ற வகையில் இனிமையாகவும் எளிமையாகவும் பரப்ப முத்தமிழும் விரவிய நாடகமேடை நல்லதொரு கருவியாகும். இதனை அறிந்த முஸ்லிம் தமிழ்ப்புலவர்கள் நடிப்புக் கலையை இஸ்லாம் கண்டித்த போதும் நடிக்கப்பெறாது, படிப்பதற்கும் பாடி விளக்கம் தருவதற்கும் உரிய வகையில் அமைந்த நாடகங்களை உருவாக்கித் தந்தனர். முஸ்லிம் புலவர்கள் படைத்த நாடகங்கள் பெரும்பாலும் அரங்கில் நடிக்கப் பெறவில்லை. இந்நாடகங்களை ஒருவர் இசையுடன் பாடியும் இடையிடையே கதைகளையும் அக்கதைகள் தரும் போதனைகளை விளக்கியும் கூறுவார். இதற்குரிய வகையிலேயே இஸ்லாமிய நாடகங்கள் அனைத்தும் படைக்கப்பட்டுள்ளன.

கோயில் கும்பாபிஷேகங்களில் இராமாயண கதை சீதை கல்யாணம் கதா காலட்சேபம் நாட்டார்கூத்து புராண நாடகம் என்று பார்த்து ரசித்துக் கொண்டிருந்த முஸ்லிம் மக்களை "நூறு மசலா", "அப்பாஸ் நாடகம்" என்று அவர்களை இழுத்துப்படிக்க இது உதவியது. டேப் ரிக்கார்டு கேசட் வந்த புதிதில் "நூறு மசலா" கேசட்டைப் போட்டுவிட்டு பக்திப் பரவத்தோடு குறிப்பாக தாய்மார்கள் நாள் முழுக்க வீட்டில் அமர்ந்து ரசிக்கச் செய்துள்ளது.

முஸ்லிம்கள் நாடகங்கள் அரங்கேற்றம்

முஸ்லிம் புலவர்கள் பல்வேறு நாடகங்களை இயற்றி அரங்கேற்றம் செய்துள்ளனர். அவைகளில் பெரும் புலவர் நாதர் முகம்மது நயினா மரைக்காயர் இயற்றிய "லால் கௌஹர்" நாடகம் நாகத்துறைக்கு ஒரு மைல் கல் எனலாம்.

கோசா மரைக்காயர்(முஹம்மது நைனா மரைக்காயரின் புதல்வர்) சராரே இஷ்க் ஷிரின் பரஹாத் லைலா மஜ்னூன் போன்ற நாடகங்களை எழுதியுள்ளார். நாகூர் புலவர் ஆபிதீன் நிறைய நாடகங்களை எழுதி இயக்கி அவரே நடித்தும் இருக்கிறார். அதில் புகழ்பெற்ற பாடகர் நாகூர் இ.எம்.ஹனிபா அவர்களும் நடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. 1950 இல் புலவர் ஆபிதீன் எழுதிய "பணம்"என்ற நாடகம் திருச்சி தேவர் மன்றத்தில் அரங்கேறியது. இந்நாடகத்தில் நாகூர் ஹனிபா கவிஞராக நடித்திருந்தார். அந்த நாடகத்திற்கு தலைமை தாங்கிய அறிஞர் அண்ணா, கலைஞருடன் வாழ்த்துறை வழங்கும்போது ஹனி என்றால் தேன் "பா" என்றால் பாட்டு. ஹனிபாவின் பாட்டு தேனாக இனிக்கிறது என்று வார்த்தை அலங்காரம் செய்ய அரங்கத்தில் பலத்த கரகோஷம் எழுந்ததாக கட்டுரையாளர் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் நாகூரில் மட்டுமல்லாது பல்வேறு ஊர்களில் முஸ்லிம்கள் நாடகங்கள் படைத்து அரங்கேற்றம் செய்துள்ளனர்.

நாடகத் தந்தை என்று போற்றப்பெறும் நாகூர் பரீது என்பார் சந்தர்ப்பம், விதவைக்க கண்ணீர் போன்ற நாடகங்களை அரங்கேற்றியுள்ளார். அதற்கு நாகூர் சலீம் என்பார் பாடல்களை இயற்றியுள்ளார். இவ்வூரில் முதன்; முதலாக நாடகத்துக்குப் பாட்டுப் புத்தகம் போட்டு புரட்சி செய்தது. "விதவைக் கண்ணீர்" நாடகத்திற்குத்தான் என்று கூறப்பெற்றுள்ளது. மேலும் சந்தர்ப்பம் ,சோக்காளி, மிஸ்டர் 1960 ஆகிய நாடகங்கள் நாகூர், நாகை, திருவாருர், திருமருகல் போன்ற ஊர்களில் நடந்துள்ளன.

அப்பாஸ் நாடகம்

இந்நாடகம் நாகூர் ஆயுள் வேதிய பகீர் முஹியித்தீன் குமாரர் வாஞ்சூர் பகீர் அவர்களால் நாகூர் நாகப்பட்டணம் பிணாங்கு – சிங்கப்பூர் இவ்வூர்களில் வழங்கும் வர்ணமெட்ல் ஒருவாறு சேகரம் செய்து 1926 இல் ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸில்) சென்னை திருவல்லிக்கேணி பதிக்கப்பெற்றது. இந்த அப்பாஸ் நாடகமும் பின்னர் வரவிருக்கின்ற அப்பாசு நாடகமும் கதைப்போக்கில் பெரும்பாலும் நன்றியிருந்தாலும் சிலவற்றுள் வேறுபட்டுள்ளன. 120 பக்கங்களைக் கொண்ட இந்நாடகத்தில் 121 வசனங்களும் 194 விருத்தங்களும் அமைந்துள்ளன.

அப்பாசு நாடகம்

இந்நாடகம் பா.வெ.முஹம்மது இப்ராஹிம் சாயபு என்பவரால் எழுதப்பெற்ற 1884 ஆம் ஆண்டு பதிக்கப்பெற்றுள்ளது 120 பக்கங்களைக் கொண்ட இந்நாடகம் 147 வசனங்களையும், 30 கீர்த்தனைகளையும் நாடகத்தில் அமைந்துள்ள வசனங்கள் பெரும்பாலும் பாடல்களின் (விருத்தங்களின்) விளக்கமாகவே அமைந்துள்ளன.

அலிபாதுஷா நாடகம்

அலிபாதுஷா நாடகம் கி.பி.1820இல் மீசல் முஹம்மது இப்ராஹிம் (வண்ணக்களஞ்சியப் புலவர்) என்பவரால் இயற்றப்பெற்ற 1870இல் பதிக்கப் பெற்றுள்ளது.

முடிவுரை

மார்க்கத்தின் உயிர்ப்புக் கோட்பாடு சிதைவடையக் காரணமாகிவிடும் என்ற எண்ணத்தாலே இஸ்லாம் நாடகத்தை விரும்பவில்லை என்பதனைக் கருத்தில் கொண்டு மனதைக் கவரும் வகையில் இசைக் கலையினையும் பாடல்களில் நுழைத்து படிக்கின்ற அல்லது கேட்கின்ற நாடகமாக முஸ்லிம்களால் படைக்கப்பட்டுள்ளது. இந்திய முஸ்லிம்கள் இத்தகைய நாடகங்களைப் படைத்துள்ளனர் என்பதை

அறியலாம். பல்வேறு நாடகங்களையும் கலைஞர்களையும் உருவாக்கி முஸ்லிம்களின் பங்களிப்பை ஆற்றியுள்ளார்கள் என்பதை இக்கட்டுரையின் வாயிலாக அறியலாம்.

பார்வை நூல்கள்

1. இசுலாம் வளர்த்த இசைத்தமிழ் (பக்.106)
2. இளையான்குடி வரலாறு, கே.கே முஹம்மது ஹனீபா, என்.ஏ.அமீர் அலி, மு.சண்முகம் தனல் பதிப்பகம் சென்னை-14 முதற்பதிப்பு மே2006 (பக் 153 ரூ 217)
3. இஸ்லாமும் தமிழும் மு.அப்துல் கரீம், தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் திருநெல்வேலி கழக வெளியீடு. மறுபதிப்பு சூலை 1985 (ப.236)

Reference:

1. Music Tamil developed by Islam (p. 106)
2. History of Ilayankudi, KK Muhammad Haneefa, NA Ameer Ali, Mu Shanmugam, Tanal Publishing, Chennai-14 First Edition May 2006 (p. 153 Rs. 217)
3. Islam and Tamil Mu.Abdul Karim, South Indian Saiva Siddhanta Nurupathippuk Kazhagam, Tirunelveli Kazhaka Publication. Reprint Furnace 1985 (p.236)